1975 மார்ச் 6]

விடுகிறது. ஆண்டுத் திட்டங்கள் மூலமாக எவ்வளவு பணம் ஒதுக்க முடியும் என்பதைக் கணக்கில் கொண்டு அந்த அளவில் புதிய பகுதிகளை எடுத்துக்கொள்ள முடியும். ஒவ்வொரு ஆண்டும் நிதி வசதிக்கேற்ப ரெவின்யூ பாரஸ்டுகளை அப்போதைக்கப்போது எடுத்துக்கொள்ளலாம்.

அருள்திரு சாரங்கபாணி கோயில் தேர்

* 216 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்குடந்தை திரு சாரங்கபாணி திருக்கோயில் திருத் தேரினைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) திருக்குடந்தை அருள்மிகு திரு சாரங்கபாணி திருக் கோயில் திருத்தேரினை புதுப்பிக்க சுமார் ரூ. 3 லட்சம் செலவாகுமாத லால் இதற்கென ஒரு திருப்பணிக்குழு அமைக்கப்படவுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் தேரினைப் புதுப்பிக்கும் திட்டம் நீண்டகாலமாகப் பரிசீலனையில் இருக்கிறது. எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நீண்டகாலப் பரிசீலனையில் இருப்பதாகத் தகவல் இல்லை. 1973-ம் ஆண்டில் நான் தஞ்சை மாவட்டத்தில் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது உள்ளூரில் இருக்கும் அந்தக் கோயிலைச் சேர்ந்தவர்கள் என்னிடத்தில் தெரிவித் தார்கள். உடனடியாக அதற்குப் பொதுப் பணித் துறை பொறி யாளர்கள் மூலமாக மதிப்பீடு தயார் செய்திருக்கிறார்கள். போதுமான நிதிவசதி கோயிலுக்கு இல்லாத காரணத்தால் தனியாகக் குழு அமைக்கப்பட்டு அதனைச் செய்ய வேண்டுமென்று கருதி தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.